செய்தபோது அதனுடைய மதிப்பீடு 223 லட்சம் ரூபாய் ஆகு மென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிடையில் வறட்சி நிவாரணப் பணியின்கீழ் 1966 ஆம் ஆண்டு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கி வள்ளியூரில் ஒருஅலுவலகத்தைத் திறந்து குடியிருப்பையும் கட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

ஆனால் இந்தத் திட்டத்தைப் பற்றி போர்டு மெம்பர் (புட் ப்ரொடக்ஷன்), சீஃப் எஞ்சினியர் ஆராய்ந்தபோது இந்தத் திட்டம் சிக்கனமாக இராது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், இந்தத் திட்டத்தைப் பற்றி விரிவாக ஆராய்ந்து மீண்டும் அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென்று தலைமைப் பொறியாளருக்கு (பாசனம்) உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை கைவிடப்பட்டது என்று எண்ணத் தேவையில்லை. பெரிய மனிதர் தலையீடு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். என்னிடத்தில்கூட சிலர் சொன்னார்கள். காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோல் அவர் பெயரை இணைத்துச் சொல்கிறார்களே தவிர, அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. க. அன்பழகன்: இந்த அணை கட்டுவதற்காகப் போடப் பட்ட மதிப்பீட்டின் அளவு விரிவடைந்து விட்டதன் காரணமாக இடையில் நிறுத்தப்பட்டது என்று சொன்னார்கள். முதலில் பரிசீலனை நடைபெற்று எல்லா விதமான விவரங்களும் சேகரிக்கப் பெற்று, அலுவலகம், குடியிருப்பு போன்றவை கட்டி முடிக்கப் பட்டு விட்டன என்று சொன்னார்கள். அலுவலகம், பொறியாளர்களுக்கு வீடுகள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்டுவிட்ட பிறகு நிறுத்தப்பட்டதற்குக் காரணம் என்ன உண்மையாகவே காக்கை உட்கார்ந்ததா? பனம்பழம் விழுந்ததா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அப்படி அல்ல. 223 லட்சம் ரூபாயைச் செலவழித்தும் அதிலே பெரும் பயன் இல்லாமல் போய்விடும். அப்படிப் பயன் இல்லாத ஒன்றை 223 லட்சம் ரூபாய் செலவுசெய்து நிறைவேற்றினால் 223 லட்சம் போய்விடும். இப்போது கைவிட்டால் 25 லட்சம்தான் போகும். ஆகவேதான், அந்தத் திட்டத்தைப் பற்றி நன்றாக ஆராய்ந்து எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அரசு ஆலோசனையை வழங்கியிருக்கிறது.

New anicuts in Periyakulam talk

Q. No. 655 Thiru. K. KANDASAMY. Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) Whether action has been taken to construct Sothupparai Anicut and Kuppombarai Anicut in Periyakulam taluk Madurai district, and

(b) if so, the details thereof?

1978 மார்ச் 22]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை கிராமத்தின் அருகே வராக நதியின் குறுக்கே அமைக்க திட்டமிடப்பட்டுள்ள சோத்துப்பாறை அணைக்கட்டு திட்டம் விரிவான ஆய்வு நிலையில் உள்ளது.

குப்பம் பாறை அணைத் திட்டம், பெரியகுளம் வட்டம், மதுரை மாவட்டம், வடகரை கிராமத்தின் அருகே அமைக்க தயாரித்த மதிப்பீடு சிக்கனமாக அமையாத காரணத்தால் கைவிடப்பட்டது.

திரு. கே. பண்ணை சேதுராம் : இந்த சோத்துப்பாறை அணைக்கட்டுத் திட்டம் நீண்ட நெடுங்காலமாக ஆய்வில் இருந்து வருகிறது. காலதாமதத்திற்குக் காரணம் என்ன? 1974-ம் ஆண்டில் அந்தத் திட்டம் மூன்றரைக் கோடி ரூபாய் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டு அப்போது அது வருமானம் வரக்கூடிய திட்டமல்ல —Not a beneficial Scheme என்ற அடிப்படையில் தள்ளப்பட்டது. தற்சமயம் பரிசீலனை செய்யப்பட்டு 5½ கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. காலதாமதம் ஆக ஆக தடங்கள் ஏற்படும் காரணத்தால் இதனை விரைவுபடுத்தி அணைக்கட்டு கட்டுவது உடனடியாகச் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சோத்துப்பாறை திட்டத்தைப் பொறுத்தவரை 451 லட்சம் ரூபாய் செலவிடப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. 451 லட்சம் ரூபாய் என்பது மிகவும் கூடுதலான தொகை. அந்த அளவுக்குச் செலவு செய்தால் அந்தத் திட்டம் ஆதாயமாக இருக்காது என்பதுதான் உண்மை. அதே நேரத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற வகையில் மதிப்பீடு தயாரிக்கின்ற துறையினர் இன்னும் எந்த அளவுக்குச் செலவைக் குறைத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்பது பற்றி மீண்டும் ஆராய வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. செலவும் குறைய வேண்டும், அதே நேரத்தில் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்ற வகையில் வழி வகைகள் காணவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. திட்ட மதிப்பீடு முடிந்த பிறகு திட்டம் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : மதுரை மாவட்டத்தில் சோத்துப்பாறைத் திட்டம் போல் குதிரையாறு திட்டம் என்ற திட்டம் பல வருஷங்களுக்கு முன்பே பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டமாகும். நமது அரசு புதிதாகப் பதவியேற்று போன ஆண்டு நிதி அறிக்கையில் இதைப்பற்றி குறிப்பிட்டிருந்தார்கள். இந்த ஆண்டு அதைப்பற்றிய பிரச்சினையே தெரியவில்லை. அது கைவிடப்பட்டு விட்டதா அல்லது பரிசீலனையில் இருந்து வருகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1975 ஆம் ஆண்டு குழுவில் ஏற்றுக் கொண்டு அறிவிக்கப்பட்ட திட்டம். பட்டியலில் அது இடம் பெற்றுள்ளது. எந்நிலையில் இருக்கிறது என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.